# February 20, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. காஸா மறுசீரமைப்புப் பணிகளுக்காக அமெரிக்கா மற்றும் அமைதிக் குழு நாடுகளின் சார்பில் 1,700 கோடி டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.1.55 லட்சம் கோடி) நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார்.

(i) கடந்த செப்டம்பரில், இஸ்ரேல்- ஹமாஸ் போரை நிறுத்த டிரம்ப் முன்மொழிந்த அமைதிக்குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம், அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் நடைபெற்றது. பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் இந்தியா பார்வையாளராக பங்கேற்றது.

(ii) நிகழ்வில் அதிபர் டிரம்ப் ஆற்றிய உரை: காஸா மறுசீரமைப்புக்காக அமைதிக் குழுவின் பல உறுப்பு நாடுகள் இணைந்து இதுவரை 700 கோடி டாலர் திரட்டியுள்ளன. அமெரிக்கா கூடுதலாக 1,000 கோடி டாலர் வழங்கும். அதேபோல், மனிதாபிமான உதவிகளுக்காக ஐ.நா. 200 கோடி டாலர் நிதி வழங்கும்.

(iii) காஸாவின் நீடித்த அமைதிக்கு, அங்கு நிலைநிறுத்தபடவுள்ள சர்வதேச படைக்கு இந்தோனேசியா, மொராக்கோ, கஜகஸ்தான், கொசோவோ, அல்பேனியா ஆகிய 5 நாடுகள் வீரர்களை அனுப்புகின்றன. காஸா காவல்துறைக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை எகிப்து மற்றும் ஜோர்டான் ஏற்றுக்கொண்டுள்ளது என்றார்.

2. இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்களில் சிறார்கள் நுழைவதைத் தடுப்பது மிகவும் சவாலானது' என்று மெட்டா நிறுவனத்தின் சிஇஓ மார்க் ஸக்கர்பெர்க் அமெரிக்க நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

(i) பயனர்கள் தங்களின் உண்மையான வயதை மறைத்து, தவறான தகவல்களை வழங்குவதே இதற்கு முக்கியக் காரணம் என்றும், இதைத் தொழில்நுட்ப ரீதியாக முழுமையாகத் தடுப்பது கடினம் என்றும் அவர் விளக்கமளித்தார்.

(ii) தற்போது 20 வயதாகும் இளம் பெண் ஒருவர், தான் சிறுமியாக இருந்தபோது சமூக ஊடகங்களைப் பயன்படுத்தியதால் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளானதாகக் கூறி, மெட்டா மற்றும் யூடியூப் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தார். கலிஃபோர்னியாவின் லாஸ் ஏஞ்சலீஸ் நீதிமன்றத்தில் புதன்கிழமை (உள்ளூர் நேரப்படி) நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையில் மார்க் ஸக்கர்பெர்க் நேரில் ஆஜரானார்.

(iii) அப்போது, பாதிக்கப்பட்ட பெண் 9 வயதிலேயே இன்ஸ்டாகிராம் கணக்கு வைத்திருந்தது குறித்து வழக்குரைஞர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த மார்க் ஸக்கர்பெர்க், 'எங்கள் தளத்தில் சிறார்களைக் கண்டறிய ஏற்கெனவே பல மென்பொருள் கருவிகளைப் பயன்படுத்தி வருகிறோம். 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு 'டீன் அக்கவுன்ட்ஸ்' போன்ற கூடுதல் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை இன்ஸ்டாகிராம் தீவிரப்படுத்தியுள்ளது. இருப்பினும், ஆப்பிள் மற்றும் கூகுள் நிறுவனங்கள் தங்களின் ஆப்-ஸ்டோர்களிலேயே வயது சரிபார்ப்பு முறையைக் கொண்டு வருவதுதான் இதற்கு நிரந்தர தீர்வாக இருக்கும்' என வாதிட்டார்.

(iv)'வருங்கால வெற்றிக்காக இளம் பயனர்களைத் தக்கவைக்க வேண்டும்' என்ற மெட்டா நிறுவனத்தின் ரகசிய மின்னஞ்சல்களைச் சுட்டிக் காட்டிய வழக்குரைஞர்கள், லாபத்துக்காகவே பதின்ம வயதினரை நிறுவனம் குறிவைப்பதாகக் குற்றஞ்சாட்டினர்.

(v) இதை மறுத்த மார்க் ஸக்கர்பெர்க், 'பதின்ம வயதினரிடம் செலவு செய்யப் பணம் இருக்காது என்பதால், அவர்கள் எங்களுக்குப் பெரிய வணிக இலக்கு அல்ல. எங்கள் மொத்த வருமானத்தில் அவர்களால் வருவது வெறும் 1 சதவீதம் மட்டுமே' என்று குறிப்பிட்டார்.

(vi) கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, இதே போன்ற புகாரில் அமெரிக்க நாடாளுமன்றக் குழுவின்

விசாரணையை மார்க் ஸக்கர்பெர்க் எதிர் கொண்டது நினைவுகூரத்தக்கது.

3. உலகின் முன்னணி செயற்கை நுண்ணறிவு நிறுவனமான ஓபன் ஏஐ மற்றும் இந்தியாவின் பெரும் தொழில் குழுமமான டாடா குழுமம் இடையே முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.

(i) இதன்மூலம், இந்தியாவில் ஏஐ தொழில்நுட்பத்தைப் பரவலாக்கவும், பிரம்மாண்டமான தரவு மையங்களை உருவாக்கவும் இரு நிறுவனங்களும் திட்டமிட்டுள்ளன.

(ii) மேலும், ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, டாடா குழுமத்தில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு 'என்டர் பிரைஸ் சாட்ஜிபிடி' சேவைக்கான அணுகல் வழங்கப்படும். இதனால், அவர்களின் பணித்திறன் மேம்படும்.

(iii) டாடா கன்சல்டன்சி சர்வீசஸின் (டிசிஎஸ்) மென்பொருள் உருவாக்கும் பணிகளை விரைவுபடுத்தவும், தரத்தை உயர்த்தவும் ஓபன் ஏஐ நிறுவனத்தின் 'கோடெக்ஸ்' தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும்.

(iv) டிசிஎஸ் நிறுவனத்தின் நிறுவனமான துணை 'ஹைப்பர் வால்ட்' மற்றும் ஓபன் ஏஐ இணைந்து இந்தியாவில் பிரம்மாண்டமான ஏஐ தரவு மையங்களை அமைக்கவுள்ளன. இந்த மையம் முதலில் 100 மெகாவாட் திறனுடன் தொடங்கப்பட்டு, எதிர்காலத்தில் 1,000 மெகாவாட் (1 ஜிகாவாட்) வரை விரிவுபடுத்தப்பட உள்ளது.

(v) 10 கோடி இளைஞர்களுக்குப் பயிற்சி:

- வணிக ரீதியான ஒப்பந்தங்கள் மட்டுமின்றி சமூகப் பொறுப்புணர்வு நோக்கில், இந்திய இளைஞர்களுக்கு ஏஐ பயிற்சியளிக்கவும் இவ்விரு நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.
- இதன்படி, சுமார் 10 கோடி இந்திய இளைஞர்களுக்கு ஏஐ சார்ந்த பயிற்சிகள் மற்றும் மென்பொருள் கருவிகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கான தொழில்நுட்ப உதவிகளும் வழங்கப்படும்.
- ஏற்கெனவே இந்த வார தொடக்கத்தில், ஏஎம்டி நிறுவனத்துடன் இணைந்து 200 மெகாவாட் திறன் கொண்ட ஏஐ கட்டமைப்பை உருவாக்க டிசிஎஸ் ஒப்பந்தம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

4. ஓலைச்சுவடிகளில் உறங்கிக்கிடந்த பண்டைத் தமிழ் இலக்கியங்களை மீட்டெடுத்து, நம் கைகளில் தவழச் செய்தவர் தமிழறிஞர் உ.வே.சாமிநாதையர் என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் புகழாரம் சூட்டியுள்ளார்.

(i) தமிழ்ப் பதிப்பியக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான உ.வே.சாமிநாதையர் கடந்த 1855- ஆம் ஆண்டு பிப்.19-ஆம் தேதி பிறந்தார்.

(ii) 1880-ஆம் ஆண்டு முதல் கும்பகோணம் கல்லூரியில் தொடர்ந்து 23 ஆண்டுகள் பணியாற்றிய அவர், 1903-ஆம் ஆண்டு முதல் சென்னை மாநிலக் கல்லூரியில் 16 ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றினார். பின்னர், 1924-ஆம் ஆண்டு மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் முதல்வரானார்.

(iii) உ.வே.சுவாமிநாத ஐயர் 3,000-க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்து ஏடுகளையும் அவர் சேகரித்தார்

(iv) ஏட்டுச் சுவடிகளைப் பதிப்பித்து நூலாக வெளியிட உ.வே.சா. எதிர்கொண்ட இன்னல்கள் கணக்கில் அடங்காதவை. அவரது அயராத உழைப்பால் புறநானூறு, குறுந்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பழந்தமிழ்ச் செல்வங்கள் பதிப்பிக்கப்பட்டு தமிழுக்கு வளமைச் சேர்த்தன.

5. மேற்குக் கரையில் நிலப்பதிவு செய்வது தொடர்பான இஸ்ரேலின் முடிவுக்கு இந்தியா உள்ளிட்ட 100 நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

(i) இஸ்ரேல் ஆக்கிரமிப்பில் உள்ள பாலஸ்தீனத்துக்கு சொந்தமான மேற்கு கரை பகுதியில் நிலப்பதிவு செய்வதற்கான திட்டத்துக்கு அந்நாட்டு அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. இது மேற்குக் கரையில் உள்ள சட்டவிரோதமான இருப்பை விரிவாக்கம் செய்யும் நோக்கில் எடுக்கப்படும் நடவடிக்கை என்றும், இந்த முடிவை இஸ்ரேல் திரும்பப் பெற வேண்டும் எனவும் 100 நாடுகள் சார்பில் ஐ.நா. வுக்கான பாலஸ்தீன நிரந்தர கண்காணிப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. இந்தியாவில் அரிய புவி நிரந்தர காந்தம் (ஆர்இபிஎம்) உற்பத்தி நடப்பாண்டில் தொடங்கும் என்று மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி தெரிவித்தார்.

(i) நியோடைமியம், பிரசியோடைமியம் உள்ளிட்ட அரிய புவி தனிமங்களின் கொள்முதலில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தும் நிலையில், இது தொடர்பான சுரங்கப் பகுதிகள் ஏலமிடப்பட்டு வருகின்றன. இந்தச் சூழலில், மத்திய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(ii) நாட்டில் அரிய கனிமங்கள் பிரித்தெடுப்பு-சுத்திகரிப்பு ஆலைகள் பற்றாக்குறையாக உள்ளன. இப்பிரச்னைக்கு தீர்வுகாணும் வகையில், ஆந்திரம், ஒடிஸா, மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய 4 மாநிலங்களில் ஆலைகள் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

(iii) குஜராத் மற்றும் ஆந்திர அரசுகள் ஏற்கெனவே பணியைத் தொடங்கிவிட்டன. விரைவில் ஒடிஸா, மகாராஷ்டிர மாநில முதல்வர்களை சந்தித்துப் பேசவுள்ளார்.

7. பொறுப்பு மிக்க புத்தாக்கம் மற்றும் மனித நேயமிக்க தொழில்நுட்பம் என்ற பிணைப்புடன், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) தொழில்நுட்பக் கட்டமைப்பை உருவாக்க இந்தியாவுடன் கைகோத்து செயல்படுவோம் என்று பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் தெரிவித்தார்.

(i) உலகின் பாதுகாப்பு மற்றும் அனைவருக்கும் வளத்தை உறுதி செய்யும் நோக்கில், உள்நாட்டு ஏ. ஐ.மாதிரிகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற பொதுவான தொலைநோக்குப்பார்வையை இந்தியாவும், பிரான்ஸும் கொண்டுள்ளன.

(ii) ஜி7 கூட்டமைப்பின் தற்போதைய தலைமைப் பொறுப்பை வகிக்கும் பிரான்ஸ், ஏ.ஐ. தொழில்நுட்பம் மற்றும் பிற தொழில்நுட்பங்களின் தவறான பயன்பாட்டில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்க தீவிர பணிகளை முன்னெடுக்கும். அந்த அடிப்படையில்தான், 15 வயதுக்கு உள்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த தடை விதிக்கும் நடைமுறைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த முன்னெடுப்பில் இந்தியாவும் இணைய வேண்டும் என பிரதமர் மோடிக்கு வேண்டுகோள் விடுத்தார்.

8. செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்ப பயன்பாட்டில் மக்களை மையப்படுத்திய அணுகுமுறைக்காக, இந்தியாவின் 5 அம்ச 'மானவ்' தொலை நோக்குப் பார்வையை முன்வைத்து எடுத்துரைத்தார் பிரதமர் மோடி.

(i) இது தொடர்பாக, தில்லி ஏ.ஐ. தாக்க உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், 'ஏ.ஐ. தொழில்நுட்ப பயன்பாட்டில் தேசிய இறையாண்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அந்த வகையில், இந்தியா சார்பில் 'மானவ்' தொலைநோக்குப் பார்வையை முன்வைக்கிறேன். இது, தார்மிகநெறிமுறை,பொறுப்பான நிர்வாகம், தேசிய இறையாண்மை, அனைவருக்குமான அணுகல்-உள்ளடக்கம், சட்டப்பூர்வ பயன் பாடு ஆகிய 5 அம்சங்களை உள்ள டக்கியது' என்றார்.

(ii) அடுத்த ஆண்டு ஏ.ஐ உச்சிமாநாட்டை ஸ்விட்சர்லாந்து நடத்தவுள்ளதாக, அந்நாட்டின் அதிபர் கய் பார்மேலின் தெரிவித்தார்.

9. மணிப்பூர் பிரச்சினை

(i) அரசியல் மாற்றம் மற்றும் உடனடி வன்முறை

- ஜனாதிபதி ஆட்சி காலத்திற்குப் பிறகு, முதலமைச்சர் யும்மன் கெம்சந்த் சிங் தலைமையிலான புதிய அரசாங்கம் சமீபத்தில் பதவியேற்றது.
- புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த மறுநாளே மாநிலம் முழுவதும் வன்முறை வெடித்தது.
- உக்ருலின் சட்டன் பஜார் பகுதியில் கடுமையான வன்முறை ஏற்பட்டது. சட்டன் மற்றும் மாவோகோட் கிராமங்களில் உள்ள தங்குல் நாகா மற்றும் குகி சமூகங்களுக்கு இடையே மோதல்கள் வெடித்தன.
- அமைதியின்மையின் போது, 25 வீடுகள் மற்றும் 4 அரசு குடியிருப்புகள் தீக்கிரையாக்கப்பட்டன, இதனால் குடியிருப்பாளர்கள் அப்பகுதியை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

(ii) குகி சமூகத்திற்குள் உள் அரசியல் மோதல்

- மெய்ட்டே தலைமையிலான புதிய அமைச்சரவையில் மூன்று குகி சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். குறிப்பாக, குகி பெண் சட்டமன்ற உறுப்பினரான நெம்சா கிப்கென் துணை முதல்வராக நியமிக்கப்பட்டார்.
- குகி-சோ அமைப்புகள் இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் சேருவதை கடுமையாக எதிர்த்தன, அவர்களுக்கு எதிராக சமூக புறக்கணிப்பை வெளியிட்டன.
- குக்கி மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் சூரசந்த்பூரில், துணை முதலமைச்சரைக் கொல்பவர்களுக்கு ₹20 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று ஆயுதமேந்திய கிராமத் தன்னார்வலர்கள் அறிவித்தனர்.
- அரசியல் நியமனங்களை எதிர்த்து "குக்கி அமைப்புகளின் கூட்டு மன்றம்" முழு அடைப்புக்கு (பந்த்) அழைப்பு விடுத்தது.

(iii) முக்கிய கோரிக்கைகள் மற்றும் வரலாற்று சூழல்

- மோதல் இரண்டு எதிரெதிர் கோரிக்கைகளில் வேரூன்றியுள்ளது: குக்கி சுயாட்சிக்கான கோரிக்கை (சட்டமன்றத்துடன் கூடிய தனி யூனியன் பிரதேசம்) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடி (எஸ்.டி) அந்தஸ்துக்கான மெய்ட்டே கோரிக்கை.
- கடந்த இரண்டு ஆண்டுகளில், இன மோதல்கள் காரணமாக 260 க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடந்த வன்முறைக்குப் பிறகு சுமார் 60,000 பேர் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப முடியாமல் நிவாரண முகாம்களில் உள்ளனர்.

(iv) பாதுகாப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்

- சமூக ஊடகங்களில் வதந்திகள் மற்றும் வெறுப்புப் பேச்சு பரவுவதைத் தடுக்க அரசாங்கம் இணைய சேவைகளை நிறுத்தியது.
- இணையத் தடை பொதுமக்களுக்கு "தண்டனையாக" செயல்பட்டது, மாணவர்களுக்கான ஆன்லைன் கல்வியை முடக்கியது மற்றும் டிஜிட்டல் வர்த்தகம் மற்றும் சிறு வணிகங்களை நிறுத்தியது.
- உக்ருல் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மத்திய பாதுகாப்புப் படையினரும் அசாம் ரைபிள்ஸும் பெருமளவில் நிறுத்தப்பட்டுள்ளனர், பல இடங்களில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது.

(v) அமைதிக்கான பரிந்துரைகள் / தீர்வுகள்

- நம்பிக்கையை வளர்ப்பது: நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப முதலமைச்சரும் புதிய நிர்வாகமும் குகி மற்றும் நாகா பெரும்பான்மை பகுதிகளுக்குச் செல்ல உள்ளனர்.
- அமைதிக் குழுக்கள்: நல்லிணக்கத்தை வளர்க்க உள்ளூர் அமைதிக் குழுக்களை உருவாக்குதல்.
- மத்திய தலையீடு: நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வைக் காண உயர் மட்டப் பேச்சுவார்த்தைக்கு அனைத்துத் தரப்பினரின் பிரதிநிதிகளையும் டெல்லிக்கு அழைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது